DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 10/2006 PW : 1

Name : வெங்கடேஷ் Age : 34

S/o : ஜெயசந்திமௌலி Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 10.08.2026

**<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) ராமசந்திரன் என்பவருக்கு வசுமதி மற்றும் சாமூண்டிஸ்வரி என்ற இரு மகள் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராமசந்திரன் உயிருடன் இருந்ததால் அவர்களை சேர்க்கவில்லை. ராமசந்திரன் இறந்த பின்பு அவரின் வாரிசுதாரர்கள் என்ற முறையில் அவர்களை தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். கோவிந்தராஜன் என்பவருக்கு ஒரு மகள் ரமாதேவி. ரமாதேவியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. கோவிந்தராஜ் தரப்பினராக இருப்பதால் அவரை சேர்க்கவில்லை. இந்த வழக்கில் நான் Geonology தாக்கல் செய்யவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்கின் அசல் தாவாவில் Geonology உள்ளது. அதில் வழக்கறிஞர் மட்டும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் ராமசந்திரன் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்களின் வாரிசுதாரர்கள் பற்றி எந்த விவரம் இல்லை. நான் நீதிமன்றத்தை கோயப்புவதற்காக தான் அவ்வாறான Geonology தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) நான் இந்த வழக்கில் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் RS Trust company இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். பிரதிவாதி பட்டியலில் RS Trust company என்ற நிறுவனத்தில் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த விவரம் எனக்கு தெரியும். இந்த வழககில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன். இன்றைய தேதிவரை இந்த வழக்கில் 13 பிரதிவாதிகள் உள்ளனர் என்றால் சரிதான். அதில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகளின் வாரிசுகள் உள்ளார்கள். வாரிசுதாரர்களுக்கு நான் வழக்கறிஞர் எதுவும் கொடுக்கவில்லை. வாரிசுதாரர்களுக்கு எதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனக்கு உண்டான பாகத்தை மட்டும் தான் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். பிரதிவாதிகளின் பாகத்தை குறித்து நான் சொல்லவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகளின் பாகம் பற்றி மட்டும் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். 4ம் பிரதிவாதியின் பாகம் எவ்வளவு என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. 5 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளின் பங்கை பற்றி நான் எதுவும் சொல்லவில்லை.

3) தாவாவின் 3ம் பத்தியில் கடைசியில் நான் இதர சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அந்த இதர சொத்துக்கள் எது என்பது தாவா தாக்கல் செய்யும் போது தெரியாது. இதர சொத்துக்கள் என்வென்று என்னிடம் பட்டியல் உள்ளது. அதை எப்போது வேண்டும் என்றாலும் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். இந்த வழக்கை 4ம் பிரதிவாதியின் வாரிசு என்ற முறையில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் தாவா தாக்கல் செய்த தேதி 2002ம் ஆண்டு 12ம் மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நீதிமன்ற சீல்–ல் 31.12.2002 என உள்ளது என்றால் சரிதான். அயிட்டம் எண்.1–ல் வரிசை எண்.9, 14 முதல் 23 வரையிலான சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏனி ஜேகப் என்ற நபருக்கு 22.07.1987 அன்று ஆவண எண்.209/1987–ல் பவர் கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த மொத்த விஸ்திரணம் 7.65 ஏக்கர்–வை அவர் பவர் பத்திரம் பெற்றபின்பு வெவ்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என் தாயார்

வில்லங்கம் சான்று பெற்ற அதன் விவரம் பார்த்து பின்பு தான் வழக்கை தாக்கல் செய்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு நினைவு தெரிந்த பின்பு நான் இந்த வழக்கின் சொத்துக்கள் சம்மந்தமாக எந்த வித வில்லங்க சான்றும் பொட்டு பார்க்கவில்லை. நான் EC போட்டு பார்க்காததால் தம்பையநாயுடு இறந்த பின்பு எந்த எந்த சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளது, எந்த எந்த சொத்துக்கள் விற்கப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரிய வாய்பில்லை என்றால் சரியல்ல. நான் வருவாய் ஆவணங்களை மட்டும் தான் பார்த்துள்ளேன். விற்கப்பட்ட சொத்துக்களை வாங்கிய நபர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

4) ஏனி ஜேகப் யார் என்று எனக்கு தெரியாது. அவர் கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. அவரிடம் கிரையம் வாங்கிய நபர்களை எனக்கு தெரியாது. நான் இந்த தாவாவில் 8 அயிட்ட சொத்துக்களை காண்பித்துள்ளேன். அந்த 8 அயிட்ட சொத்திற்கும் நான் வில்லங்க சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 8 அயிட்ட சொத்துக்களும் எந்த எந்த பிரதிவாதிகளுக்கு எந்த எந்த ஆவணம் முன்னிலைக்கு சொந்தம் என்ற விவரம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். என்னுடைய தாவாவில் ஆவண பட்டியலில் 2 முதல் 11 மற்றும் 18 முதல் 23 ஆகிய ஆவணங்களில் நான் மேற்சொன்ன விவரங்களை நான் சொல்லியுள்ளேன். நான் சொன்ன ஆவணங்கள் அனைத்தும் வருவாய் ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களின் அடிப்படையில் யார் யாருக்கு எந்த எந்த சொத்துக்கள் சொந்தம் சொல்ல இயலாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாவா பரிகாரத்தில் ஏற்கனவே விற்கப்பட்ட சொத்துக்கள் செல்லாது என்ற பரிகாரம் நான் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணம் RTI Act வழங்கப்பட்ட ஆவணமாகும். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்களின் விவரம் கேட்டு இருந்தேன். 1 முதல் 17 ஆவணங்கள் போதியதாக இல்லை என்பதால் தான் மேற்சொன்ன ஆவணங்கள் கேட்டேன். RTI அக்கு நான் அனுப்பிய கடிதத்தை நான் தாக்கல் செய்யவில்லை, அவர்கள்அளித்த பதிலை

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.18–ல் RTI Application பூந்தமல்லிக்கு அனுப்பப்பட்டதாக பதில் அனுப்பினார்கள். வா.சா.ஆ.19 முதல் 23 வரைலியான ஆவணம் நான் கேட்டதன் பேரில் எனக்கு வழுங்கப்பட்ட ஆவணங்களா என்றால் 22 ஆவணம் எனக்கு வழுங்கப்பட்டது மற்ற ஆவணங்கள் RTI letter–க்கு சம்மந்தப்பட்ட ஆவணம் கிடையாது.

5) வா.சா.ஆ–22 குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் இந்த வழக்கில் ஏற்கனவே உள்ளது என்றால் சரிதான். UDRக்கு முன்பு எந்த விவரம் உள்ளது என்பதற்காக நான் ஆவண்களை பெற்றேன். UDRக்கு முன்பு அந்த சொத்துக்கள் தம்பையநாயுடு பெயரில் உள்ளது. இன்றைய தேதி வரை யார் யார் பெயரில் உள்ள என RTI–ல் கேட்கவில்லை. வா.சா.ஆ.19 ஆவணம் நான் RTI பெறப்பட்ட ஆவணம் அது " A " Register ஆவணம் ஆகும். வா.சா.ஆ.19 கையில் எழுதப்பட்ட முதல் பக்கத்தில் அதன் பக்கத்தில் கையெழுத்தோ, சீல் இல்லை அதன் பின்புறம் உள்ளது. என்னுடைய முன்னோர்களின் சொத்து என்பதை நிரூபிக்கும் பொருட்டு நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் தம்பையநாயுடு பெயர் தான் உள்ளது. அவர்களுக்க எந்த வருடம் சொத்துக்கள் கிடைத்து அந்த ஆவணத்தை வைத்து சொல்ல இயலாது என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ.20, 21, 22, 23 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதிலும் எவ்வாறு அந்த சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது சொல்ல இயலாது என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஆவணம் நான் தான் 2012ம் ஆண்டு வாங்கினேன். 2010–லிருந்து RTI Application தாக்கல் செய்தேன். RTI Application தாக்கல் செய்து மேற்சொன்ன ஆவணங்கள் 2 வருடஙகளுக்குள் கிடைத்து. ஆனால் CRP நிலுவையில் இருந்ததால் நான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.23 யார் கேட்டாலும் கொடுப்பார்கள். நான் தான் 4ம் பிரதிவாதியின் மகன் இல்லை என்பதால் நான் எந்த வித பாகமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

6) கோவிந்தம்மாள் மற்றும் ரோஜம்மாளின் தனிப்பட்ட சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் நான் எந்த வித பாகம் கோரமுடியாது என்றால்

சரியல்ல. சேர்க்கவேண்டிய வாரிசுதாரர்களை சேர்க்காததால் RS Trust சேர்க்காததாலும், இதர கிரையதாரர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கில் ஒவ்வொரு பிரதிவாதியின் பாகத்தை நான் குறிப்பிட்டு சொல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தம்பையநாயுடு இறக்கும் போது அவருடைய சொத்துக்கள் அவரின் 3 மகன்களக்கு பாத்தியப்பட்டுவிட்டது என்றாலம் அதனால் மூதாதையர் சொத்தை நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் விற்கப்பட்ட சொத்து சொல்லாது என்ற பரிகாரம் கேட்டாமல் பாகத்தை கோரும் பரிகாரம் மட்டும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. பல பேர் கிரையம் பெற்றுஅவரவர் சுவாதீனத்தில் இருப்பதால் நான் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில்இல்லாதால் நான் சந்தை அடிப்படையில் நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்கவேண்டும் என்றாலும் அவ்வாறு செலுத்தாதால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கும் என்னுடைய தாயாருக்கும்விவாகரத்து ஏற்பட்டதால் என் மூலமாக என் தாயார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகள் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியப்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து மூதாதையர் சொத்து கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் எந்த வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.